# சமரச வார விழிப்புணர்வுப் பேரணி



தருமபுரி பழைய நீதிமன்ற வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சமரச வார விழிப்புணர்வுப் பேரணியை தொடங்கிவைத்த மாவட்ட சமரச மைய ஒருங்கிணைப்பாளர் தமயந்தி.

**தருமபுரி, ஆக. 21:** தருமபுரி நீதிமன்ற வளாகத்தில் சமரச வார விழிப்புணர்வுப் பேரணி, முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில சமரச மற்றும் இணக்க முறை மையத்தின் வழிகாட்டுதலின்பேரில், சமரச வாரம் குறித்த விழிப்புணர்வு முகாம் தருமபுரி மாவட்ட பழைய நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது. முதன்மை மாவட்ட நீதிபதி கே. சுதா தலைமை வகித்து நிகழ்வைத் தொடக்கி வைத்து, சமரச வாரம் குறித்த விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

தொடர்ந்து, சமரச வார விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. மாவட்ட சமரச மைய ஒருங்கிணைப்பாளர் தமயந்தி பேரணியைத் தொடக்கிவைத்தார். கல்லூரி மாணவ, மாணவியர் பங்கேற்ற பேரணி நீதிமன்ற வளாகத்தில் தொடங்கி, முக்கிய வீதிகள் வழியாகச் சென்றது.

இதில், மாவட்ட சிறப்பு சார்பு நீதிபதி விபிசி, சமரச மைய வழக்குரைஞர்கள் ராஜேந்திரன், ராஜ", அருள்ஜோதி, ஜானகிராமன் ஆகியோர் சமரசத் தீர்வு குறித்து விளக்கினர். மாவட்ட மற்றும் வட்டார அளவில் செயல்படும் சமரச மையங்களில் வழக்குதாரர்கள் தங்கள் வழக்குகளுக்கு சமரசத் தீர்வு பெறலாம். சமரச மையம் மூலம் கிடைக்கும் சுமுகத் தீர்வு இறுதியானது. இதற்கு மேல்முறையீடு கிடையாது.

சமரசத் தீர்வு காணப்படும் வழக்குகளுக்கு நீதிமன்றக் கட்டணத்தைத் திருப்பி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த இலவச சட்ட சேவையை வழக்குதாரர்கள், பொதுமக்கள் பயன்படுத்திப் பயன்பெற வேண்டும் என்று இந்த முகாமில் வலியுறுத்தப்பட்டது.

# குறைந்த மின் அழுத்தத்தை சீரமைக்க வேண்டும்

## கிருஷ்ணகிரி ஆட்சியரிடம் விவசாயிகள் கோரிக்கை



பையூரில் ட்ரோன் மூலம் நெல் பயிருக்கு பூச்சி மருந்து தெளிக்கும் முறையை விவசாயிகளுடன் பார்வையிட்ட ஆட்சியர் ச. தினேஷ்குமார்.

**கிருஷ்ணகிரி, ஆக.21:** வேப்பனப்பள்ளி, சூளகிரி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலவும் குறைந்த மின் அழுத்தத்தால் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் புகார் தெரிவித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் அடுத்த பையூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் மண்டல வேளாண் ஆராய்ச்சி மையத்தில் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் ச. தினேஷ்குமார் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது:

வேப்பனப்பள்ளி, நெடுஞ்சாலை மற்றும் சூளகிரி பகுதிகளில் குறைந்த மின் அழுத்தம் ஏற்படுவதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாய சங்கத்தின் கீழ் இயங்கும் சுயஉதவிக் குழுக்களுக்கு தேங்காய்ப்பால் மற்றும் மதிப்புக்கூட்டுப் பொருள்கள் தயாரிக்கப் பயிற்சி அளிக்க வேண்டும். தனியார் பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க வேண்டும், கிருஷ்ணகிரி அணை இடதுபுறக் கால்வாய், அவதானப்பட்டி ஏரி அருகே உள்ள பாசனக் கால்வாயைத் தூர்வார வேண்டும் என வலியுறுத்தினர்.

பின்னர், மாவட்ட ஆட்சியர் ச. தினேஷ் குமார் பேசியதாவது:

விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, வேளாண் பணிகளை நேரடியாகப் பார்வையிடும் நோக்கில் பையூர் தோட்டக்கலைக் கல்லூரியில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது. கூட்டத்தில் பெறப்பட்ட 177 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தொடர்ந்து, நெல் வயலில் ட்ரோன் மூலம் மருந்து தெளிக்கும் முறையையும், தேங்காய் பறிக்கும் இயந்திரத்தின் செயல்பாட்டையும் விவசாயிகளுடன் ஆட்சியர் பார்வையிட்டார். இந்த நவீன ட்ரோன் 16 லிட்டர் கொள்ளளவு கொண்டது. 13,000 எம்ஏஎச் திறன் கொண்ட பேட்டரி மூலம் ஒருமுறை முழுமையாக சார்ஜ் செய்தால் சுமார் 24 நிமிடங்கள் வரை பறந்து செயல்படக்கூடியது. மேலும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் இணைக்கப்பட்டுள்ளதால், பயிரின் வளர்ச்சி நிலை, பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் போன்றவற்றைக் கண்டறிந்து, தேவையான பகுதிகளை அடையாளம் காண உதவுகிறது.

ட்ரோன் மூலம் வயலைப் புகைப்படம் எடுத்து ஆய்வு செய்வதுடன், பயிர் பரப்பளவை அளவிடுதல், பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் உள்ள பகுதிகளைக் கண்டறிதல் போன்ற பணிகளையும் மேற்கொள்ள முடியும். ஒரு ஏக்கர் நெல் வயலை சுமார் 8 முதல் 10 நிமிடங்களில், இரண்டு டேங்க் திரவத்தைப் பயன்படுத்தித் தெளிக்க முடியும். ஒரு டேங்கிற்கு சுமார் ரூ.500 முதல் ரூ.600 வரை தெளிப்புக் கட்டணம் இருக்கும். விவசாயப் பணிகளில் தொழிலாளர் பற்றாக்குறையைச் சமாளித்தல், குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில் மருந்து தெளித்தல் உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் இதில் உள்ளன.

இதேபோல், விவசாயிகள் தேங்காய்களைப் பறிக்க உதவும் வகையில், வேளாண் பொறியியல் துறை லாரியில் பொருத்தப்பட்ட தேங்காய் பறிக்கும் இயந்திரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. டிரக் மூலம் இயக்கப்படும் தென்னை அறுவடை இயந்திரம், தென்னை மரங்களின் உச்சிக்குப் பாதுகாப்பாகவும் வேகமாகவும் செல்லப் பயன்படும் தானியங்கி வாகனமாகும். இந்த இயந்திரத்தை விவசாயிகள் ஒரு மணி நேரத்துக்கு ரூ.450 வாடகையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என விளக்கம் அளிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மஞ்சுளா, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் உமா மகேஸ்வரி, பையூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் அனீசாராணி, வேளாண் அறிவியல் மைய தலைவர் சுந்தர்ராஜ், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் உமா, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் வேளாண்மைத் துறை இணை இயக்குநர் உமா, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் குணவதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் நடராஜன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

# ஒசூர் கிரிக்கெட் லீக் போட்டி: 48 தொழிற்சாலை அணிகள் பங்கேற்பு



கிரிக்கெட் போட்டியை தொடங்கிவைத்த காவேரி மருத்துவமனை செயல் இயக்குநர் விஜய்பாஸ்கரன்.

**ஒசூர், ஆக. 21:** ஒசூரில் 7-ஆவது ஆண்டாக நடைபெறும் ஒசூர் கிரிக்கெட் லீக் போட்டிகளின் தொடக்க விழா, ஒசூர் அதியமான் பொறியியல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், 48 தொழிற்சாலை அணிகள் பங்கேற்கின்றன.

ஒசூர் காவேரி மருத்துவமனையுடன் எச்ஐஏ இணைந்து இந்த டி20 கிரிக்கெட் போட்டிகளை நடத்துகின்றன. தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினர்களாக காவேரி மருத்துவமனையின் செயல் இயக்குநர் டாக்டர் விஜய்பாஸ்கரன், மருத்துவ இயக்குநர் டாக்டர் பி.வி. அரவிந்தன், எச்.ஐ.ஏ. தலைவர் ரமேஷ், துணைத் தலைவர் ரவீந்திரன், காவேரி மருத்துவமனையின் மூத்த பொது மேலாளர் ஜோஷ் வர்கீஸ் ஜாய் உள்ளிட்டோர் போட்டிகளைத் தொடங்கிவைத்தனர். தொடக்க விழாவில் காவேரி மருத்துவமனை செயல் இயக்குநர் விஜய்பாஸ்கரன் பேசியதாவது:

தொழில்துறை நகரமான ஒசூரில் பணியாற்றும் தொழிலாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு பணிச்சுமை மற்றும் மன அழுத்தத்தைக் குறைத்து, உடல் நலனைப் பாதுகாக்க விளையாட்டு மிக அவசியமானது. ஆரம்பத்தில் 20 அணிகளுடன் தொடங்கப்பட்ட டி20, இந்த ஆண்டு 48 முன்னணி தொழிற்சாலை அணிகள் பங்கேற்கும் மாபெரும் விளையாட்டுத் திருவிழாவாக வளர்ந்துள்ளது என்றார்.

மூத்த பொது மேலாளர் ஜோஷ் வர்கீஸ் ஜாய் பேசியதாவது:

அடுத்த 3 வாரங்களுக்கு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் லீக் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெறும். இத்தொடரின் இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா வரும் செப். 6 ஆம் தேதி மாலை நடைபெறவுள்ளது. இதில் சிறப்பு விருந்தினராக இந்திய அணியின் பிரபல கிரிக்கெட் வீரர் தங்கராசு நடராஜன் பங்கேற்று வெற்றியாளர்களுக்குக் கோப்பைகளை வழங்க உள்ளார். மேலும், காவேரி மருத்துவமனை சார்பில் ஒசூரில் முதன்முறையாக காவேரி மாரத்தான் போட்டி செப். 27 ஆம் தேதி நடைபெறுகிறது என்றார்.

# புகையிலைப் பொருள்கள் விற்பனை செய்த கடைக்கு ரூ. 25,000 அபராதம்

**பென்னாகரம், ஆக. 21:** தருமபுரி மாவட்டம், சின்னம்பள்ளியில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை விற்பனை செய்த மளிகைக் கடைக்கு ரூ. 25,000 அபராதம் விதித்து, 14 நாள்கள் கடை இயங்க உணவு பாதுகாப்புத் துறையினர் தடை விதித்தனர்.

பென்னாகரம் அருகே சின்னம்பள்ளி, பெரும்பாலை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடைகள்தோறும் பெரும்பாலை போலீஸார் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, சின்னம்பள்ளி பேருந்து நிலையம் எதிரே உள்ள மளிகைக் கடையில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டு, அவை பறிமுதல் செய்யப்பட்டன.

தொடர்ந்து பென்னாகரம் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால், காவல் உதவி ஆய்வாளர் பூங்காவனம், சிறப்பு பிரிவு காவலர் தயாளன் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு ரூ. 25,000 அபராதம், 14 நாள்கள் கடை இயங்கத் தடை விதித்து உத்தரவிட்டனர்.

அதேபோல தேநீர் கடையில் கலப்பட தேயிலைப் பொருள்கள் பயன்படுத்துவது உறுதிசெய்யப்பட்டு, அவை பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், கடை உரிமையாளருக்கு ரூ.1,000 அபராதம் விதிக்கப்பட்டது. உணவு சார்ந்த வணிகர்கள் உணவு பாதுகாப்புத் துறையின் உரிமம் பெற்றிருக்க வேண்டும். உணவு பாதுகாப்புத் துறையின் உரிமச் சான்றிதழ் இன்றி வணிகம் செய்தால் ரூ.5,000 அபராதம் விதிக்கப்படும்.

தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள் விற்பனை மற்றும் உணவு சார்ந்த புகார்களுக்கு உணவு பாதுகாப்புத் துறை புகார் எண் 94440 42322 மூலம் கட்செவி அல்லது குறுஞ்செய்தி வாயிலாக பொதுமக்கள் தகவல் அளிக்கலாம் என்று உணவு பாதுகாப்புத் துறையினர் தெரிவித்தனர்.

# கைரேகை பதிவு செய்யும் இயந்திரங்களில் பழுது

## நியாய விலைக் கடை பணியாளர்கள் போராட்டம்

**தருமபுரி, ஆக.21:** கைரேகை பதிவு செய்யும் இயந்திரத்தில் ஏற்படும் பழுதை சரிசெய்ய கோரி நியாய விலைக்கடை பணியாளர்கள் வெள்ளிக்கிழமை தருமபுரி வட்ட வழங்கல் அலுவலகம் முன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தருமபுரி வட்ட வழங்கல் அலுவலகம் முன் நடைபெற்ற போராட்டத்துக்கு, தமிழ்நாடு அரசு நியாய விலைக் கடை பணியாளர் சங்க மாநிலச் செயலாளர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் தனசேகர் முன்னிலை வகித்தார்.

இதில், நியாய விலைக்கடைகளில் குடும்பட அட்டைதாரர்களின் கைரேகை பதிவு செய்யும் பணியின் போது இயந்திரத்தில் இணைப்பு கிடைக்காமல் பழுது ஏற்படுகிறது. இதனால் பதிவு செய்யும் பணி தாமதமாகிறது. அனைத்து இயந்திரங்களிலும் இணைய இணைப்பு பிரச்னை நிகழ்வதால், குடும்ப அட்டைதாரர்கள் சிலர் வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றனர்.

எனவே இந்த பிரச்னைகளை களைய வேண்டும். அதுவரை கைரேகை பதிவு செய்யும் இயந்திரங்களை அலுவலகத்திலேயே ஒப்படைப்பதாக தெரிவித்தனர். இதனை தொடர்ந்து, இயந்திரங்களில் ஏற்படும் பழுதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர்.

இதையடுத்து நியாய விலைக்கடை பணியாளர்கள் மீண்டும் தங்களது கடைகளுக்கு திரும்பினர். இதில், 30-க்கும் மேற்பட்ட நியாய விலைக்கடை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# பார்கூரில் நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் ஆர்ப்பாட்டம்

**கிருஷ்ணகிரி, ஆக.21:** சர்வர் பிரச்னையால் பிஓஎஸ் இயந்திரங்களைப் பயன்படுத்த இயலாத நிலையில், பர்கூரில் நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் பல இடங்களில் செயல்படும் நியாயவிலைக் கடைகளில் பொருள்களை விற்பனை செய்ய உதவும் பிஓஎஸ் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இயந்திரம் சர்வர் பிரச்னை உள்ளிட்ட காரணங்களால் செயல்படாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையாம். இதையடுத்து, பர்கூர் வட்டத்தைச் சேர்ந்த நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் சிலர் பிஓஎஸ் இயந்திரங்களுடன் பர்கூர் வட்டாட்சியர் அலுவலகத்துக்கு வந்தனர்.

அங்கு வட்ட வழங்கல் அலுவலரிடம், நியாயவிலைக் கடை பணியாளர்கள் சங்க மாவட்டப் பொருளாளர் நித்தியானந்தன் தலைமையில் பிஓஎஸ் இயந்திரங்களை ஒப்படைக்க முயன்றனர். சர்வர் பிரச்னை, பிஓஎஸ் இயந்திரப் பழுது ஆகியவற்றை நீக்க வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.


## MANAPPURAM FINANCE LTD.

CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

**தங்க நகைகள் பொது ஏலம்**

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 16.09.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பினறி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

தர்மபுரி, ஹொசூர் தர்மபுரி, 0122330810075059, 5137, மாரந்தஹள்ளி தர்மபுரி, 0121720820000422, பாலக்கோடு தர்மபுரி, 0120260810056175, பெண்ணகரம் தர்மபுரி, 0116860820000488, கிருஷ்ணகிரி, பாலாஜிநகர், 0122960720000220, 0210, பெங்களூர் ரோடு ஒசூர், 0104750710790313, 0223, 9964, 0217, சென்னை ரோடு கிருஷ்ணகிரி, 0117410810079510, 9858, தென்கனிக்கோட்டை கிருஷ்ணகிரி, 0116830710066710, 6816, 0236, 6424, 6434, 0218, 0244, புதிய பஸ் ஸ்டாண்டு கிருஷ்ணகிரி, 0123920810056739, பழைய பேட்டை கிருஷ்ணகிரி, 0102390810803413, 0291, சாந்திநகர் ஒசூர், 0108080820000185, 0208, வேப்பனப்பள்ளி கிருஷ்ணகிரி, 0116530810060475, நாமக்கல் , நாமகிரிப்பேட்டை நாமக்கல், 0123370710066158, வடக்கு தேர் வீதி திருச்செங்கோடு, 0124610820000164, பரமத்தி, 0126410720000250, 0244, புதுச்சத்திரம் நாமக்கல், 0119380810049109, ராசிபுரம், 0103910810771221, 0252, 0253, திருச்செங்கோடு நாமக்கல், 0122140810077606, 7608, 7628, 0304, 0305, 0306, 0308, வேலூர் நாமக்கல், 0117600810042667, சேலம், அம்மாப்பேட்டை சேலம், 0116000810046949, ஆத்தூர், 0119060710056245, பெங்களூர் ரோடு சேலம், 0110460710071375, 0383, எடப்பாடி சேலம், 0127430810043963, 3979, 3986, எல்லம்பிள்ளை சேலம், 0118400810080595, 0185, ஐந்து ரோடு ஜங்ஷன் சேலம், 0109070810045296, 5305, 0244, 0246, கங்கவள்ளி சேலம், 0113470720000302, 0580, கோரிமேடு சேலம், 0114710810047011, 0212, லீ பஜார் சேலம், 0110780720000138, மேச்சேரி சேலம், 0112440810068223, 8226, 8228, ஓமலூர் சேலம், 0113590720000296, பெத்தநாயக்கன்பாளையம் சேலம், 0124220720000256, சேலம், 0100640810058437, சேலம் அக்ரஹாரம் ரோடு, 0103280810047224, 7231, 7235, டி எம் எஸ் பஸ் ஸ்டாப் சேலம், 0124010810033697, 0239, வாழப்பாடி, 0128610710074084, 3753, 3774, 0277, விநாயகபுரம் ஆத்தூர், 0101490720000358, 0302, 0306,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக



**தெற்கு இரயில்வே**

பொருட்கள் மேலாண்மை துறை
ஏல நிகழ்ச்சி நிரல் – செப்டெம்பர் – 2026
அறிவிப்பு எண். 09 / 2026

ஃபெர்ரஸ் ஸ்க்ராப், ஃபெர்ரஸ் அல்லாத ஸ்க்ராப், பிற பல்வகை ஸ்க்ராப்கள், கழித்துக் கட்டப்பட்ட வேகன், பயணப்பெட்டிகள் மற்றும் லோகோக்கள், ஸ்க்ராப் ரெயில்கள் மற்றும் பிற நிரந்தர வழி ஸ்க்ராப் பொருட்களை விற்றுத் தீர்ப்பதற்காக மின்னணு ஏலம் நடத்தப்படும்.

| வ. எண் | மின்னணு ஏலத்தை நடத்தும்வர் | செப்டெம்பர் 2026 மாதத்தின் ஏல தேதிகள் | | | ஏலத்துக்கான பொருட்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | GSD/ பெரம்பூர் | 02/09/26 | 15/09/26 | 28/09/26 | மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் பற்றிய விவரங்கள், www.ireps.gov.in இணைய தளத்தில் உள்ள ஏலப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன. |
| 2 | CSSD/ பொன்மலை | 03/09/26 | 16/09/26 | 24/09/26 | |
| 3 | SSD/ போத்தனூர் | 04/09/26 | 11/09/26 | 21/09/26 | |
| 4 | MAS கோட்டம் | 09/09/26 | 16/09/26 | 23/09/26 | |
| 5 | SA கோட்டம் | 04/09/26 | 11/09/26 | 21/09/26 | |
| 6 | TVC கோட்டம் | 08/09/26 | 18/09/26 | 29/09/26 | |
| 7 | PGT கோட்டம் | 03/09/26 | 10/09/26 | 22/09/26 | |
| 8 | TPJ கோட்டம் | 07/09/26 | 17/09/26 | 25/09/26 | |
| 9 | MDU கோட்டம் | 07/09/26 | 17/09/26 | 25/09/26 | |

ஏலங்கள் மொத்த எண்ணிக்கை :27
விரிவான கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் அறியவும் ஏலப்பட்டியல் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் பார்வையிடுங்கள் : இணையதளம்
http://www.ireps.gov.in->E-Auction->Sale->Live Auctions

முதன்மை தலைமை பொருட்கள் மேலாளர்



**CHANGE OF NAME**

I, **ADIL** (Given name – ADIL, no surname), born on 23/08/2007 (Place of birth-KUWAIT) S/o. ALLAUDDIN KHAN MOHAMMED IDRIS KHAN, resident of D/NO-296/A1, RAYAKOTTAI HOUSING BOARD, PHASE-10, NEW TEMPLE LAND HUDCO, HOSUR, KRISHNAGIRI – 635109 have added/changed my surname name to **ALLAUDDIN KHAN**, no change in given name and shall henceforth be known as **ADIL ALLAUDDIN KHAN**

**ADIL**



**CHANGE OF NAME**

I, **ALLADDEN MOHAMMED IDRIS KHAN** (old given name – ALLADDEN MOHAMMED IDRIS KHAN, no surname), born on 02/01/1977 (Place of birth- THANE MS) S/o. MOHAMMED IDRIS AABID KHAN resident of D/NO-296/A1, RAYAKOTTAI HOUSING BOARD, PHASE-10, NEW TEMPLE LAND HUDCO, HOSUR, KRISHNAGIRI – 635109 have changed my given name to **ALLAUDDIN KHAN,** added/changed my surname name to **MOHAMMED IDRIS KHAN** and shall henceforth be known as **ALLAUDDIN KHAN MOHAMMED IDRIS KHAN**

**ALLADDEN MOHAMMED IDRIS KHAN**



**இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**

HINDUJA HOUSING FINANCE

தலைமை அலுவலகம்: 167-169, 2வது தளம், அண்ணா சாலை, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. கிளை அலுவலகம்: எண்.15, முதல் தளம், வேலமா கார்டன்ஸ், கிருஷ்ணகிரி பைபாஸ் ரோடு, ஒசூர், தமிழ்நாடு – 631 501.

**கேட்பு அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு**

இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் பின்வரும் அறிவிப்பினை இதன் மூலம் வழங்குகிறது. தேசிய வீட்டு வங்கி வழங்கியுள்ள வழிகாட்டுதல்களின்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கடன் வசதி பெற்றுள்ளனர். பெற்ற கடனுக்கு சரிவர கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திடம் அடமானமாக வைத்துள்ளனர். கடன் வசதி பெற்ற பின்னர், கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளை கடைபிடிக்காமல், மாதந்திர தவணைத் தொகைகள் (EMI) மற்றும் அதற்குரிய வட்டி, இதர செலவுகளை முறையாக செலுத்தத் தவறியதன் காரணமாக, அவர்களது கடன் கணக்கு வாராக்கடன் (NPA) பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களின் கடன் விவரங்களும், இனிமேல் தேதியிட்டபடி நிலுவையில் உள்ள தொகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், பாதுகாக்கப்பட்ட கடனீட்பவராக இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், நிதிச் சொத்துக்களின் பாதுகாப்பகம் மற்றும் பாதுகாப்பு வட்டி மற்றும் அமலாக்கச் சட்டம், 2002 (SARFAESI சட்டம்) இன் விதிகளின்படி மீற்காணும் கடன்தாரருக்கு எதிராக நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளார் என்பதை கடன்தாரருக்கும் பொதுமக்களும் கவனத்திற்கு கொண்டுவரும் வண்ணம் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். எனவே, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 (அறுபது) நாட்களுக்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகை, வட்டி மற்றும் இதர செலவுகள் அனைத்தையும் முழுமையாக செலுத்துமாறு இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறு செலுத்தத் தவறினால், SARFAESI சட்டம் பிரிவு 13(4)-ன் கீழ் பாதுகாக்கப்பட்ட கடனீட்பவருக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அல்லது ஏதேனும் ஒரு உரிமையையும் இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனம் செயல்படுத்தும். அதில் அடமானச் சொத்துக்களை கையகப்படுத்தும் மற்றும் அவற்றை விற்பனை செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளும் அடங்கும். எனவே, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பாக எவரேனும் பொதுமக்கள் எந்தவித பரிவர்த்தனைகளிலும் ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கிளை: ஒசூர், கடன்தாரர்: திரு. வெங்கடாசலம் கோவிந்தராசு, இணை கடன்தாரர் : திருமதி. அமுதா வெங்கடாசலம், ஆகிய இருவரும் வசிப்பது : MES மெயின் ரோடு, முத்தியாலா நகர், கிராமப்புறம், பெங்களூரு, கர்நாடகா, இந்தியா-560 054. கடன் கணக்கு எண்: TN-SLM-HSUR-A0000000861, NPA தேதி: 06-05-2026, கேட்பு அறிவிப்பு தேதி: 09-05-2026, நிலுவைத் தொகை ரூ.10,61,888.00/- அன்றுள்ளபடி: 06.05.2026.**

**அசையா சொத்துக்களின் விவரங்கள்:** (i) சர்வே எண்./பரப்பளவு: S.No 437/1C3, புஞ்சை ஹெக்டேர் 0.96.00ல், இந்நிலத்தில் 1262.50 சதுர அடி அல்லது 117.29 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம். (ii) மொத்தப் பரப்பளவு: 1262.50 சதுர அடி அல்லது 117.29 சதுர மீட்டர் நிலம். (ii) இடம்: கஞ்சலூரத்தம் கிராமம், பென்னாகரம் வட்டம், தர்மபுரி பதிவு மாவட்டம், பென்னாகரம் சார்பதிவாளர் அலுவலகம். குடியிருப்பு மனைக்கான **நான்கு எல்லைகள்:** வடக்கு: பொதுவழி, தெற்கு: சிவசுகதிவேல் நிலம், கிழக்கு: திருப்பதி பாகப்பிரிவினை நிலம், மேற்கு: வெங்கடேசன் நிலம், மொத்தம் 1262.50 சதுர அடி பரப்பளவுள்ள இந்நிலத்துடன், மேலே அனைத்து பொருந்துதல்களுடன் கூடிய RCC மொட்டைமாடிக் கட்டிடம் மற்றும் வழிப்பாதை உரிமைகளுடன். **தவணைகள்:** வடக்கு பகுதியில் கிழக்கு முதல் மேற்கு வரை 25 அடி, தெற்கு பகுதியில் கிழக்கு முதல் மேற்கு வரை 25.50 அடி, கிழக்கு பகுதியில் வடக்கு முதல் தெற்கு வரை 50 அடி, மேற்கு பகுதியில் வடக்கு முதல் தெற்கு வரை 50 அடி.

மேற்கூறிய கடன்தாரர்கள் இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (HHFL)-க்கு பணம் செலுத்தத் தவறினால், இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (HHFL சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்கண்ட கடனீட்டு சொத்துகளுக்கு எதிராக, செலவுகள் மற்றும் விளைவுகள் குறித்து முற்றிலும் கடன் வாங்கியவர்களின் பொறுப்பே ஆகும். கடன்தாரர்கள் இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (HHFL)-ன் எழுத்துப்பூர்வமான அனுமதியின்றி மேற்படி சட்டம் பிரிவு 13 (13)-ன் படி மேற்குறிப்பிட்டுள்ள சொத்துக்களை விற்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது வேறுவழியில் மாற்றம் செய்தலோ சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவார்கள். எந்தவொரு நபரும் அந்தச் சட்டத்தின் விதிகள் அல்லது அங்கு விதிக்கப்பட்ட விதிகளுக்கு முரணான ஊக்கமளிக்கும் நபர்கள், சட்டத்த